# பராமரிப்பு பெறுபவரின் சாசனம்/பட்டயம்

*எங்கள் பராமரிப்பு பெறுபவருக்கான எங்கள் அர்ப்பணிப்பு*

எங்கள் ரென் சி மருத்துவமனையின் (Ren Ci Hospital) பராமரிப்பு பெறுநராக, உங்களுக்கு பின்வரும் உரிமைகள் உள்ளன:

**பாதுகாப்பான மற்றும் தரமான பராமரிப்பு (Safe and Quality Care)**
தனிநபர்-மைய அணுகுமுறையுடன் (person-centred) பாதுகாப்பான மற்றும் பொருத்தமானதுமான பராமரிப்பைப் பெறுதல்.பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலில் உங்கள் தினசரி வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ அதிகாரம் உள்ளதாக உணர்தல்.

**கண்ணியம், மரியாதை மற்றும் இரக்கம் (Dignity, Respect and Compassion)**
உங்கள் பின்னணி அல்லது நிலைமையைப் (அந்தஸ்து) பொருட்படுத்தாமல், பராமரிப்பின் எல்லா கட்டங்களிலும் மரியாதை, கண்ணியம் மற்றும் இரக்கத்துடன் சமமாக நடத்தப்படுவார்கள்.

**உங்கள் பராமரிப்பு குழுவை அறிதல் (Know Your Care Team)**
உங்கள் பராமரிப்பில் ஈடுபடும் Or பராமரிப்பு பெறுநருக்கு சேவை வழங்கும் பராமரிப்பு குழுவின் உறுப்பினர்களை அறிந்து கொள்ளுதல்

**தனிநபர் உரிமை மற்றும் ரகசியத்தன்மை: (Privacy and Confidentiality)**
சிங்கப்பூர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிமுறைகளின்படி தேவைப்பட்டால் தவிர, உங்களின் தனிப்பட்ட தரவு தனிப்பட்டதாகவும் ரகசியமாகவும் பாதுகாக்கப்படும். மேலும் இது நேரடி மற்றும் மறைமுக பராமரிப்பு மற்றும் பிற தொடர்புடைய நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். எங்களின் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு கொள்கைக்கு (Personal Data Protection Policy) www.renci.org.sg/Personal-Data-Protection என்ற இணைப்பைப் பார்க்கவும்.

**தெளிவான தகவல் தொடர்பு மற்றும் தகவல்கள்: (Clear Communication and Information)** உங்களுக்குப் புரியும் மொழியிலும் முறையிலும் உங்கள் பராமரிப்பு, உரிமைகள் மற்றும் பொறுப்புகள், மற்றும் ரென் சி (Ren Ci) கட்டணங்கள் பற்றிய தகவல்களைப் பெறுதல்.

**தன்னுரிமை மற்றும் தேர்வு :**
உங்கள் பராமரிப்பு மற்றும் அன்றாட வாழ்க்கை தொடர்பான முடிவுகளில் நீங்கள் பங்கேற்கலாம். மேலும், சிகிச்சையை மறுப்பதற்கும் அல்லது இடைநிறுத்துவதற்கும், நர்சிங் இல்லத்தை விட்டு வெளியேறுவதற்கும், பார்வையாளர்களை மறுப்பதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு. எந்தவொரு காரணத்தையும் கூறாமல், எந்த நேரத்திலும் ஆராய்ச்சித் திட்டங்களில் பங்கேற்கலாம், பங்கேற்பதை மறுக்கலாம் அல்லது விலகிக் கொள்ளலாம்.

**குடும்ப, சமூக, கலாச்சார, ஆன்மீக மற்றும் மத ஆதரவு: (Family, Cultural,Spiritual and Religious Support)**
உங்கள் குடும்பம், சமூகத் தொடர்புகள், கலாச்சார, ஆன்மீக மற்றும் மதத் தேவைகள் முடிந்தவரை மதிக்கப்பட்டு ஆதரிக்கப்படுவதை உறுதி செய்தல்.

**வாழ்க்கையின் இறுதி திட்டங்கள் மற்றும் தேர்வுகள் (End of Life Plans and Choices)** முன்கூட்டியே பராமரிப்புத் திட்டங்களை (ACP - Advanced Care Plans) உருவாக்குங்கள், மேலும் உங்கள் இறுதி விருப்பங்கள் மதிக்கப்படுவதை உறுதி செய்துகொள்ளுங்கள். உங்கள் பராமரிப்பு முடிவுகளை எடுப்பதற்கு ஒரு பிரதிநிதியை நியமிக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு.

**கருத்துகள் மற்றும் அக்கறை /கவலைகள்/புகார்கள் (Feedback and Concerns)**
சிகிச்சை அல்லது சேவை பற்றிய உங்கள் கருத்துகள் அல்லது கவலைகள் பாகுபாடு அல்லது பழிவாங்கும் பயமின்றி நியாயமான காலத்திற்குள் தீர்க்கப்படுவது. பின்வரும் கருத்துத் தெரிவிக்கும் வழிகளில் எதைப் பயன்படுத்தியும் நீங்கள் உங்கள் கவலைகளைத் தெரிவிக்கலாம்.

6385 0288 qsm@renci.org.sg e-Feedback form

# பாதுகாப்பு பெறுநர் பட்டயம் (Care Recipient's Charter)

*பாதுகாப்பு பெறுநர் மற்றும் குடும்பப் பொறுப்புகள்*

ரென் சி-யில் (Ren Ci), நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். தரமான கவனிப்பை வழங்குவது என்பது உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் மற்றும் எங்களுக்கும் இடையே நெருக்கமான ஒத்துழைப்பு தேவைப்படும் ஒரு முயற்சியாகும்.

எங்கள் பாதுகாப்பு பெறுநராக, நீங்கள் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாவீர்கள்:

**ஒப்புக்கொள்ளப்பட்ட பராமரிப்புத் திட்டங்களைப் பின்பற்றுங்கள் (Follow Agreed Care Plans)**
உங்கள் பராமரிப்புத் திட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்று, ஒப்புக்கொள்ளப்பட்ட பராமரிப்பு அல்லது சிகிச்சை முறைகளைப் பின்பற்றுங்கள். மருந்துகள், பராமரிப்பு, சிகிச்சைத் திட்டங்களை மறுக்க அல்லது நிறுத்த, அல்லது மருத்துவமனையை/நிலையத்தை விட்டு வெளியேற நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.

**உங்கள் கவலைகளைத் தெரிவியுங்கள் (Communicate Your Concerns)**
உங்கள் பராமரிப்பு, சிகிச்சை அல்லது எந்தவொரு அறிவுரையும் உங்களுக்குப் புரியவில்லை என்றால் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். உங்கள் உடல்நிலையில் ஏற்படும் மாற்றங்களை உங்கள் பராமரிப்புக் குழுவிற்குத் தெரிவியுங்கள்.

**மற்றவர்களை மதியுங்கள் (Respect Others)**
உங்களுடன் சிகிச்சை பெறுபவர்கள், சேவை வழங்கும் பராமரிப்பு குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பார்வையாளர்கள் அனைவரிடமும் கண்ணியமாகவும் மரியாதையுடனும் நடந்துகொள்ளுங்கள்.

**தனிநபர் சுதந்திரம் மற்றும் சொத்துக்களை மதித்தல் (Respect Privacy and Property)**
மற்றவர்களின் தனிநபர் சுதந்திரம், கண்ணியம் மற்றும் சொத்துக்களை மதியுங்கள். உங்களது சொந்த உடமைகளுக்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.

**விதிமுறைகள் மற்றும் பாதுகாப்பைப் பின்பற்றுதல் (Observe Rules and Safety)**
அனைவரின் நலனுக்காகவும், இந்த நிறுவனத்தின் விதிமுறைகள், தொற்று கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடக்கவும்.

**உங்களது சிகிச்சைக்கான கட்டணங்களைச் செலுத்துதல். (Settle your charges related to your care)**
இந்த நிறுவனம் உங்களுக்கு வழங்கிய சிகிச்சை மற்றும் தங்குமிடத்திற்கான அனைத்துக் கட்டணங்களையும் உடனடியாகச் செலுத்துங்கள். ஏதேனும் நிதிச் சிக்கல்கள் அல்லது சந்தேகங்கள் இருந்தால், எங்களது மருத்துவ சமூக நல அதிகாரிகளிடம் (Medical Social Workers) ஆரம்பத்திலேயே கலந்தாலோசிக்கவும்.